**சார்பு நீதிமன்றம், மேட்டூர்**
**முன்னிலை: திரு. எல். கமலக்கண்ணன், பி.எ., எம்.எல்.,**
**சார்பு நீதிபதி, மேட்டூர்**

**திருவள்ளுவராண்டு 2055, குரோதி ஆண்டு, மார்கழி திங்கள் 22 ஆம் நாள்**
**2025 ஆம் ஆண்டு ஜனவரி திங்கள் 06 ஆம் நாள் திங்கள்கிழமை**

IA.No: 04/2024
in
IA.No: 02/2023
in
H.M.O.Pno: 99/2021

G. சக்திவேல் ... மனுதாரர் / மனுதாரர் / எதிர்மனுதாரர்

/எதிராக/

S. ரோஹினி ... எதிர்மனுதாரர் / எதிர்மனுதாரர் / மனுதாரர்

இம்மனு 09.02.2024 அன்று கோப்பிற்கு எடுக்கப்பட்டு, 06.01.2025 ம் தேதியன்று இறுதி விசாரணைக்கு வந்தபோது மனுதாரர் தரப்பில் வழக்கறிஞர் திரு. G. கேசவன், அவர்கள் ஆஜராகியும், எதிர்மனுதாரர் தரப்பில் வழக்கறிஞர் K. கோகிலவாணி, அவர்கள் ஆஜராகியும், இருதரப்பு வாதங்கள் கேட்கப்பட்டு, வழக்கு ஆவணங்களை பரிசீலனை செய்தும், இதுநாள்வரை பரிசீலனையில் இருந்து வந்து இன்று இந்நீதிமன்றம் பிறப்பிக்கும்

## உத்தரவு

I.A.No: 02/2023 மனுவில் கடந்த 17.11.2023 ம் தேதி தள்ளுபடி செய்து பிறப்பிக்கப்பட்ட உத்தரவை ரத்து செய்து மனுவை மீண்டும் கோப்பிற்கு எடுக்க தக்க உத்தரவு பிறப்பிக்க வேண்டி உரிமையியல் விசாரணைமுறை சட்டம் கட்டளை 9 விதி 9 உ/இ பிரிவு 151 ன் கீழ் இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2. **மனுதாரர் தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட மனுவின் சுருக்கம்:**

மனுதாரர் I.A.2/2023 என்ற மனுவை மரபணு பரிசோதனைக்காக தாக்கல் செய்திருந்தார். மேற்படி மனு கடந்த 17.11.2023ம் தேதி மனுதாரர் ஆஜரின்மையால் மனுதாரருக்கு எதிராக தள்ளுபடி செய்யப்பட்டது. ஆனால், மனுதாரருக்கு கடந்த 15.11.2023ம் தேதி விபத்து ஏற்பட்டு இடது கையில் எலும்பு முறிவு ஏற்பட்டதால் நீதிமன்றத்தில் ஆஜராகவில்லை. பின்னிட்டு 22.01.2024ம் தேதி உடல்நிலை சரியான போதும் மீண்டும் மனுதாரருக்கு வைரஸ் காய்ச்சல் ஏற்பட்டு மருத்துவ சிகிச்சையில் இருந்தார். மேற்படி காய்ச்சல் கடந்த 08.02.2024ம் தேதி தான் சரியானது. எனவே வழக்கறிஞரை சந்திக்க முடியவில்லை. பின்னிட்டு வழக்கின் நிலையை வழக்கறிஞரை சந்தித்து தெரிந்து கொண்டார். எனவே, கடந்த 17.11.2023ம் தேதி தள்ளுபடி செய்து பிறப்பிக்கப்பட்ட உத்திரவை ரத்து செய்ய இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. மேற்படி காரணங்களுக்காக மனுதாரர் நீதிமன்றத்தில் ஆஜராக இயலவில்லை. இம்மனுவை அனுமதிக்காவிட்டால் மனுதாரருக்கு கஷ்ட நஷ்டங்கள் ஏற்படும். மனுவை அனுமதிக்க வேண்டும்.

3. **எதிர்மனுதாரர் தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட எதிருரையின் சுருக்கம்:**

இம்மனு பொய்யானது, உண்மைக்கு புறம்பானது, சட்டப்படியும், நியாயப்படியும், நிலைக்கத்தக்கதல்ல. மனுதாரர் கடந்த 15.11.2023ம் தேதி விபத்தில் சிக்கி தனது இடது கையில் எலும்பு முறிவு ஏற்பட்டது என்பதை நிரூபிக்கும் ஆவணமான மருத்துவ குறிப்புகள் எதையும் இந்த மனுவுடன் தாக்கல் செய்யவில்லை. மேலும் 22.01.2024ம் தேதி உடல்நிலை சரியான போதும் மனுதகாரருக்கு வைரஸ் காய்ச்சல் ஏற்பட்டதால் மனுதாரர் மருத்துவ சிகிச்சையில் இருந்ததாகவும், மேற்படி காய்ச்சலில் இருந்து 08.02.2024ம் தேதி தான் விடுபட்டதாகவும் குறிப்பிட்டுள்ள விவரத்தை நிரூபிக்கும்

ஆவணமான மருத்துவ குறிப்புகள் எதையும் இந்த மனுவுடன் தாக்கல் செய்யவில்லை. மேலும் I.A.1/2021ல் எதிர்மனுதாரர் தாக்கல் செய்த ஜீவனாம்சம் மனுவில் மனுதாரர்கள் மூவருக்கும் வாழ்வாதார செலவுத் தொகையாக மாதம் பத்தாயிரம் ரூபாய் செலுத்த உத்திரவிட்டுள்ளது. இந்த மனுதாரர் அதனை நிறைவேற்றாமல் அதை தவிர்க்கும் வகையில் இடைக்காலமாக இந்த டி.என்.ஏ பரிசேதனை மனுவினை தாக்கல் செய்துள்ளார். அவசரகதியில் I.A.2/2023 என்ற மனுவினை தாக்கல் செய்து வழக்கு விசாரணையை தாமதப்படுத்தியுள்ளார். ஆனால் மனுதாரர் ஜீவனாம்ச தொகையை இந்த எதிர்மனுதாரர்களுக்கு செலுத்தவில்லை. மேலும், மனுதாரர் சென்னையில் வேறு ஒரு பெண்ணுடன் குடும்பம் நடத்திக்கொண்டு அவர்களை பராமரித்து வருவதனால் இந்த எதிர்மனுதாரரை விவாகரத்து செய்துவிட்டு நிரந்தரமாக அந்த பெண்ணுடன் குடும்பம் நடத்தலாம் என்ற காரணத்துடன் பொய்யான சங்கதிகள் குறிப்பிட்டு வழக்கு தாக்கல் செய்துள்ளார். ஜீவனாம்சம் கொடுக்க கூடாது என்ற காரணத்திற்காக மைனர் குழந்தையின் மரபணுவை பரிசோதனை செய்ய மனு தாக்கல் செய்து காலதாமதப்படுத்துகிறார். சரியான காரணம் இல்லாத இந்த மனு நிலைக்கத்தக்கதல்ல. எனவே மனுவை செலவுத் தொகையுடன் தள்ளுபடி செய்து உத்தரவு செய்ய வேண்டும்.

4. இம்மனுவில் தீர்வுக்குரிய பிரச்சனை யாதெனில் இம்மனு அனுமதிக்கத்தக்கதா இல்லையா? என்பதே ஆகும்.

5. இருததரப்பு வாதங்கள் கேட்கப்பட்டது. இருதரப்பு ஆவணங்கள் பரிசீலனை செய்யப்பட்டது.

6. **தீர்வு:**

இவ்வழக்கின் அசல் மனுவை மனுதாரர் விவாகரத்து கோரி தாக்கல் செய்துள்ளார். மேற்படி மனு நிலுவையில் இருந்தபோது எதிர்மனுதாரர் தரப்பில் இடைக்கால ஜீவனாம்சம் கோரி மனு தாக்கல் செய்யப்பட்டு மேற்படி மனு I.A.No. 1 / 2021 ல் 17.11.2023 ம் தேதி அனுமதிக்கப்பட்டுள்ளது. I.A.No. 2 / 2023 மனு மனுதாரர் தரப்பில் இந்திய சாட்சிய சட்டம் பிரிவு 45 ன் கீழ் தாக்கல் செய்யப்பட்டு மேற்படி மனுவில் மனுதாரர் ஆஜரின்மையால் 17.11.2023 ம் தேதி தள்ளுபடி செய்யப்பட்டுள்ளது. மேற்படி மனுவை மீண்டும் கோப்பிற்கு எடுக்க 16.12.2023 ம் தேதிக்குள் மனுதாரர் மனு தாக்கல் செய்திருக்க வேண்டும். ஆனால் மேற்படி மனுவை தாக்கல் செய்ய மனுதாரருக்கு 52 நாட்கள் காலதாமதம் ஏற்பட்டுள்ளது. மனுதாரருக்கு விபத்து ஏற்பட்டு இடது கையில் எலும்பு முறிவு ஏற்பட்டதாகவும் அதன் பின்னிட்டு வைரஸ் காய்ச்சல் ஏற்பட்டதாகவும் அதனால் உரிய நேரத்தில் மனு தாக்கல் செய்ய இயலவில்லை என்றும் காலதாமதத்திற்காக காரணம் குறிப்பிட்டுள்ளார். அதற்கான மருத்துவ ஆவணங்கள் ஏதும் தாக்கல் செய்யவில்லை என்ற எதிர்மனுதாரர் தரப்பு வாதம் ஏற்று கொள்ளும்படி உள்ளது. இருப்பினும் மனுதாரருக்கு ஒரு வாய்ப்பு வழங்கும் வகையில் காலதாமதமனு செலவு தொகையுடன் அனுமதிக்கப்பட்டுள்ள நிலையில் இம்மனுவையும் செலவு தொகையுடன் அனுமதிக்கலாம் என்று இந்நீதிமன்றம் கருதுகிறது. அவ்வாறே இம்மனுவிற்கு தீர்வு காணப்படுகிறது.

7. முடிவாக, இம்மனு செலவு தொகையுடன் அனுமதிக்கப்படுகிறது. மனுதாரர் செலவுத் தொகையாக எதிர்மனுதாரருக்கு ரூபாய் 1,000/-த்தை 23.01.2025 ம் தேதியன்றோ அல்லது அதற்கு முன்பாகவோ செலுத்தும்பட்சத்தில்

இம்மனு அனுமதிக்கப்படும் என்றும் தவறும் பட்சத்தில் இம்மனு தாமாகவே தள்ளுபடியாகிவிடும். அழைக்க 23.01.2025.

இந்த உத்தரவு என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் நேரடியாக கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு பின்னர் என்னால் பிழை திருத்தம் செய்யப்பட்டு இன்று 2025ம் ஆண்டு ஜனவரி மாதம் 06ம் நாள் திங்கள் கிழமை இந்நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

L KAMALAKANNAN Digitally signed by L KAMALAKANNAN Date: 2025.01.06 18:07:16 +0530

**சார்புநீதிபதி,**
**மேட்டூர்**

**மனுதாரர் தரப்பு சாட்சி, சான்றாவணம்:**

இல்லை

**எதிர்மனுதாரர் தரப்பு சாட்சி, சான்றாவணம்:**

இல்லை

L KAMALAKANNAN Digitally signed by L KAMALAKANNAN Date: 2025.01.06 18:07:23 +0530

**சார்புநீதிபதி,**
**மேட்டூர்**